# மாநகர் மன்றம் தக்க வழிமுறையில் செயல்படுகிறது:

## ஆலோசனை வாரியக் குழு உறுப்பினர் விளக்கம்



கோலாலம்பூர், நவ. 26-

கோலாலம்பூர் மாநகர் மன்றம் அண்மையில் மேற்கொண்ட பல அமலாக்க நடவடிக்கை குறித்து முன்னாள் பிரதமர் துன் மகாதீர் சமூக வலைத்தளத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். இது குறித்து கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் ஆலோசனை வாரியக் குழு உறுப்பினர் லாய் சென் ஹெங் தக்க விளக்கம் தந்துள்ளார்.

சட்ட வழிமுறைகளுக்கு ஏற்ப மாநகர் மன்றம் அனைத்து அமலாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எடுத்தேன்; கவிழ்த்தேன் என்ற நிலை இல்லை. மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் துல்லியமாக ஆராயப்பட்ட பிறகே அமலுக்கு வருகிறது.

கோலாலம்பூர் மாநகர் மன்றமானது வாரந்தோறும் தனது அதிகாரத்துவ சமூக வலைத்தளத்தில் அமலாக்க நடவடிக்கை குறித்து விரிவாக விவரித்து வருகிறது. கோலாலம்பூர் மாநகர் மன்றம் பல்வேறு கலாச்சாரங்களுக்கு கட்டியம் கூறுகிறது. அரசியல் அனுகூலத்திற்காக மொழி விவகாரத்தை ஒரு பகடை காயாக பயன்படுத்த முற்படுவது முற்றிலும் ஓர் ஆரோக்கிய மற்ற செயலாகும்.

நாம் உண்மையான விவகாரங்களின் மீது முதன்மை கவனம் செலுத்தி மாநகரின் நற்தோற்றத்தை உலகளவில் உயர்த்துவோம். அனைத்து தரப்புகளின் தேவைகளை நிறைவுசெய்யும் ஆற்றல் கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்கு உண்டுஎன்பது எனது நம்பிக்கை. மன்றம்அனைத்து தரப்பினருடன் தலைசிறந்த தொடர்பு நிலையினை கொண்டுள்ளது. கோலாலம்பூர் விவகாரத்தை மடானி அரசாங்கமும் மாநகர் மன்றமும் தலைசிறந்த முறையில் கையாளுவதற்கு துன் மகாதீர் வழிவிடவேண்டும் என்று லாய் சென் ஹெங் வேண்டுகோள் விடுத்தார்.